# தஞ்சையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம்.

## தோழர் அழகர்சாமியின் வீர கர்ஜனை.

(ஒரு நிருபர்)

தஞ்சை, ஜுலை. 22.

தஞ்சை தமிழர் கழகத்தின் ஆதரவில், இராசப்பா மைதானத்தில் தோழர் சுயம்பிரகாசம், பி. ஏ. பி. எல்., அவர்களின் தலைமையில் 21-7-38 மாலை 6-மணிக்கு மாபெருங் கூட்டம் ஒன்றுகூடியது. அதுசமயம், கும்பகோணம் தோழர் எஸ். ஏ. ரவூப் அவர்களும், பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகர்சாமி அவர்களும் விரிவுரை நிகழ்த்தினர். முன்னவர் காங்கிரஸ் ஆட்சியின் அலங்கோலத்தையும், கனம் ராஜகோபாலாச்சாரியாரின் அடக்குமுறை திருவிளையாடல்களையும், உத்தியோகம் பார்ப்பன லட்சணமாகும் வகைகளையும், தோழர் சத்தியமூர்த்தியின் பொறுப்பற்றசவாலையும், தமிழர்களை ஒடுக்க ஆரியரின் சமய சஞ்சீவியான ஒற்றுமையையும் விளக்கிப் பேசினார். அதன் பின் பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் 'இந்தி கட்டாய பாட மர்மத்தையும், பழந்தமிழர்களின் தமிழின் சிறப்பையும்' ஆரியர் வந்து தமிழ் நாட்டில் குடியேறிய பிறகு ஆரிய பாஷையாகிய சமஸ்கிருதம், தமிழ் பாஷையில் நூற்றுக்கு அறுபது பங்கு இரண்டறக் கலந்து தமிழ் பாஷை சீரழிந்திருக்கும் நிலைமையையும், பிறகு ஆங்கிலம் வந்து புகுந்த தமிழ் பாஷை சழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனதையும் இந்த இலக்கணமற்ற, சுய உருவற்ற சமஸ்கிருதமும், உருதுவும், கலந்த இந்தி கட்டாய பாடமாவதினால் தமிழ் பாஷை என்ற, ஒரு தனிப் பெருமை கொண்ட பாஷை முற்றிலும் அழிவதுடன், அப்பாஷைக்குரிய தமிழரின் நாகரிகமும், தமிழ்நும் அழிந்து ஆரியவர்க்கத்தாருக்கு அடிமையாவது தான் முடிவென்றும் எடுத்துக் கூறி இனி தமிழர்களின் கடமையும், ஒற்றுமையாக உழைக்கவேண்டிய அவசியத்தையும்,

---

சேரப்போகின்றீர்களா? இல்லை எங்களை கனம் ஆச்சாரியார் அடக்குமுறைக்குப் பலியிடப் போகின்றீர்களா?

தங்களன்புள்ள,
சி. பழனிக்குமாரன்,
ஆலமாத்துப்பட்டி.